# 2. அல் – இபாதாத்

## 2.1. தொழுகையை நிலைநிறுத்துவோம்

- தொழுகை முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்.
- தொழுகை அல்லாஹ்வுக்காகவே நிறைவேற்றப்படல் வேண்டும்.
- தொழுகையை விடுதல் பெரும்பாவமாகும்
- ஜமாஅத்தோடு தொழுதல், கூடுதலான நன்மையைத் தேடித்தரும்.

இஸ்லாமிய ஷரீஆவில் தொழுகை மிக முக்கிய கடமைகளுள் ஒன்றாகும். தொழுகையின் முக்கியத்துவத்தையும் அதன் சட்டதிட்டங்களையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத்தந்த முறைப்படி கற்று, தெளிவுபெற்று அதை நிறைவேற்றுவது ஒவ்வொரு முஸ்லிமான பருவமடைந்த ஆண், பெண் இருபாலர் மீதும் கடமையாகும்.

போர்க் களங்களில் கூட தொழுகையைப் பேணவேண்டும் என்பதை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது..

(நபியே! யுத்த முனையில்) நீரும் அவர்களுடன் இருந்து அவர்களுக்கு நீர் தொழவைக்க (இமாமாக முன்) நின்றால், அவர்களின் ஒரு பிரிவினர் (தொழ) நிற்கட்டும், மேலும் தங்களுடைய ஆயுதங்களை அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். உம்முடன் இவர்கள் ஸஜ்தா செய்து முடிந்துவிட்டால் அவர்கள் (அணியிலிருந்து விலகி) உங்கள் பின்புறம் (உங்களைக்காத்து) நிற்கவும். (அது சமயம்) தொழாமலிருந்த மற்றொரு கூட்டத்தினர் வந்து உம்முடன் (சேர்ந்து) தொழவும். (ஏனென்றால்) நீங்கள் உங்கள் பொருட்களிலிருந்தும், உங்கள் ஆயுதங்களிலிருந்தும் கவனக்குறைவாக இருந்துவிட்டால், உங்களை ஒரேயடியாகத் தாக்க வேண்டுமென்று அந்நிராகரிப்போர் விரும்புகின்றனர். (4:102)

தொழுகை முஸ்லிம்களுக்குறிய கட்டாயக் கடமையாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தொழுகையை விட்டவர்கள் முஸ்லிமெகொண்டுகளாக இருக்க முடியாது என்று எச்சரித்துள்ளார்கள்.ாப

மறுமையில் முதன் முதலில் தொழுகையை பற்றியே விசாரிக்கப்படும் என்று ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஓர் அடியானிடத்தில் முதலில் தொழுகையைப்பற்றியே விசாரிக்கப்படும், அது சரியாக நிறைவேற்றப்பட்டிருந்தால் மற்ற எல்லா வணக்கங்களும் சரியாக இருக்கும், அது தவறாக இருந்தால் மற்ற எல்லா வணக்கங்களும் பிழையாக இருக்கும். (தபரானி)

## தொழுகை அல்லாஹ்வுக்காகவே நிறைவேற்றப்படல் வேண்டும்

**அல்லாஹ்விடத்தில் நமது அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இரண்டு நிபந்தனைகள் உள்ளன அவை.**

01. ‘‘இஹ்லாஸ்’’ (உளத் தூய்மை)
02. அல்இத்திபாஉ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஸுன்னாக்களைப் பின்பற்றி ஒழுகுதல்)
அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்.

" فَمَنْ كَانَ يَرْجُوْ لِقَاءَ رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلاً صَالِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا "

“எவர் தன் இரட்சகனைச் சந்திக்க ஆதரவு வைக்கின்றாரோ, அவர் நற்கருமங்களைச் செய்யவும். தனது இரட்சகனுக்கான வணக்கத்தில் எவரையும் இணையாக்க வேண்டாம்” (18:110)

இந் அல் குர்ஆன் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நற்கருமம் என்பதற்கு இஹ்லாஸ் என்பதே பொருள் என இமாம் இப்னு கஸீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள். மனத்தூய்மை இல்லாது நிறைவேற்றப்படும் தொழுகை அத்தொழுகையாளியின் முகத்தில் தூக்கி எறியப்படும் இக்லால் இல்லாத அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தொழுகையை நிறைவேற்றுவது சுவர்க்கம் செல்வதுற்கு மிக முக்கிய காரண-மாகும். “இன்னும் அவர்கள் எத்தகையதோரென்றால், தங்கள் தொழுகைகளைப் பேணுவார்கள். இத்தகையோர்தாம் (சுவர்கத்தை) அனந்தரம் கொள்பவர்கள்.அவர்கள் எத்தகையோரென்றால் ஃபிர்தௌஸ் (என்னும் சுவனபதி யை) அனந்தரமாகக் ொள்ளார்கள், அவர்கள் அதில் நிரந்தமாக (த்தங்கி) இருப்பார்கள்”.(ஸூரதுல் முஃமினூன்: 9,10,11) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

நாம் நபியவர்கள் தொழுது காட்டிய முறையில் தொழுகையின் முளைமைகளைப் பேணி அமைதியாகவும், இறை சிந்தனையுடனும் தொழுது வர வேண்டும். கற்பித்துத்தந்த தொழுகை முறைமை மாற்றமாக தொழுகின்றாரோ அது அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒரு நாள் நபித்தோழர் ஒருவர் தொழுது விட்டு வரும்போது அவரை அவதானித்த நபியவர்கள் “நீங்கள் தொழவில்லை, உங்களின் தொழுகை அல்லாஹ்விடம் சேராது. திருப்பித் தொழுங்கள்” எனக் கூறினார்கள். அவர் இரண்டாவது முறை தொழுது விட்டு வந்தார். நபியவர்கள் மீண்டும் அதே வார்தகைளை கூளினார்கள். அவர் மூன்றாவது முறையும் தொழுது விட்டு வந்தார். நபியவர்கள் முதலில் கூறியது போன்று கூறினார்கள். அப்போது அந்தத் தோழர் “அல்லாஹ்வின் தூதரே!எனக்குக் இதை விட சிறந்த முறையில் தொழத் தெரியாது கற்றுத் தாருங்கள்”எ ன்று கேட்டார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அந்த தோழருக்கு தொழும் முறையைக் கற்றுக் கொடுத்தார்கள்.

எனவே எமது தொழுகைகள் நபியவர்களின் தொழுகையைப் போல் இருக்கின்றதா? என்பதைத்தினமும் பரிசீலனை செய்து பார்த்து முறையாகத் தொழுவதற்கு பழகிக்கொள்ள வேண்டும்.

## தொழுகையை விடுவது பெரும் குற்றமாகும்

“நிச்சயமாக முஸ்லிமான மனிதனுக்கும் காபிருக்கும் இடையிலுள்ள வித்தியாசம் தொழுகையை விடுவதுதான்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

“ எங்களுக்கும் அவர்களுக்கும் (முஸ்லிம் அல்லாதவர்களுக்கும்) மத்தியிலுள்ள உடன்படிக்கை தொழுகைதான். அதை (தொழுகையை) யார் விட்டுவிடுகின்றாரோ நிச்சயமாக அவர் காபிராகிவிட்டார்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

" فِيْ جَنّٰتٍ يَتَسَآءَلُوْنَ عَنِ الْمُجْرِمِيْنَ مَا سَلَكَكُمْ فِيْ سَقَرَ قَالُوْا لَمْ نَكُ مِنَ الْمُصَلِّيْنَ "

“ சுவனவாசிகள் குற்றவாளிகளிடம் உங்களை ‘‘ஸகர்’’ என்ற நரகத்தில் நுழையவைத்தது எது? என்று கேட்பார்கள். அதற்கவர்கள் நாம் தொழக்கூடியவர்களாக இருக்கவில்லை என்று கூறுவார்கள்.” (74: 40-43)

" فَخَلَفَ مِنْ بَعْدِهِمْ خَلْفٌ أَضَاعُوا الصَّلَاةَ وَاتَّبَعُوا الشَّهَوَاتِ فَسَوْفَ يَلْقَوْنَ غَيًّا "

“இவர்களுக்குப் பின்னர் (வழிகெட்ட) தீய பின் தோன்றல்கள் இவர்களுடைய இடத்தை அடைந்தார்கள். தொழுகையை(த் தொழாது) வீணாக்கினார்கள், மனோ இச்சைகளையும் பின்பற்றினார்கள். ஆகவே அவர்கள் மறுமையில் பெரும் தீமையை (நரகை)ச் சந்திப்பார்கள்’’. (19:59)

“யார் தொழுகையைப் பேணித் தொழுகின்றாரோ அது அவருக்கு மறுமையில் ஒளியாகவும், அத்தாட்சியாகவும், நரகிலிருந்து பாதுகாக்கக்கூடியதாகவும் ஆகிவிடும். யார் அதைப் பேணித் தொழவில்லையோ, அது அவருக்கு ஒளியாகவோ, அத்தாட்சியாகவோ, நரகிலிருந்து பாதுகாக்கக்கூடியதாகவோ இருக்காது. இன்னும் அவன் மறுமையில் காரூன், ஃபிர்அவ்ன், ஹாமான், உபை இப்னு கலஃப் போன்றவர்களோடு எழுப்பப்படுவான். என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்’’. (அஹ்மத், தப்ரானி)

## கடமையான தொழுகைகளை குறிக்கப்பட்டவேளையில் தொழுதல்

" إِنَّ الصَّلَاةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِينَ كِتَابًا مَّوْقُوتًا "

“நிச்சயமாக தொழுகை விசுவாசிகளின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கின்றது”. (4:103)

“அல்லாஹ்விடத்தில் மிக விருப்பமான அமல் எது என்று நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டேன். அதற்கவர், “தொழுகையை அதன் ஆரம்ப நேரத்தில் தொழுவதாகும்” எனப்பதில் கூறினார்கள்”. (ஸஹீஹுல் புஹாரி)-

## ஜமாஅத்தோடு தொழுவது மிக முக்கிய ஸுன்னத்தாகும்

“நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கண்தெரியாத ஒரு நபித்தோழர் வந்து” அல்லாஹ்வின் தூதரே! என்னை மஸ்ஜிதுக்கு அழைத்து வருவதற்கு யாருமில்லை என்று சொல்லி வீட்டில் தனிமையாக தொழுவதற்கு அனுமதி கேட்டார். நபியவர்களும் அவர்களுக்கு வீட்டில் தொழுதுகொள்ள அனுமதி கொடுத்தார்கள்.அவர் திரும்பிச்செல்லும் போது அவரை அழைத்து உமக்கு அதன் சப்தம் கேட்கிறதா? என வினவினார்கள். அதற்கு அவர் ஆம் என்றார்.அப்படியானால் தொழுகைக்கு மஸிஜிதுக்கு வரவேண்டும் என்றார்கள்”.(ஸஹீஹ் முஸ்லிம்)

“ஜமாஅத்தோடு தொழும் தொழுகை தனித்துத் தொழும் தொழுகையைவிட இருபத்தேழு மடங்கு (நன்மையால்) சிறந்தது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்”. (ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

அதான் சொல்லி “தொழுகைக்காக அழைக்கப்பட்டு தொழுகையைத் நடத்துவதற்காக ஒருவரை ஏற்படுத்திவிட்டு தொழுகைக்கு வராதவர்களின் வீடுகளுக்குச்சென்று அவர்களின் வீடுகளை எரித்து விடலாமென என் மனம் நாடுகின்றது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்”. (அஹ்மத்)

ஒருவர் முஸ்லிமா இல்லையா என்பதைப் பிரித்தறியக்கக்கூடிய ஒரே ஒரு வணக்கம் தொழுகையாகும். வயது வந்த புத்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தினமும் ஐவேளை தொழுவது கட்டாயக் கடமையாகும். நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற வணக்கங்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் உள்ளனவாக

இருந்தாலும் அவற்றில் சில சலுகைகளும் விதிவிலக்குகளும் உள்ளன. வசதியில்லதவர்கள் மீது ஸகாத், ஹஜ் போன்றவை கடமையாகமாட்டாது. உடம்பில் சக்தியில்லாதவர்கள், நோயாளிகள், பிரயாணிகள், பாலூட்டும் தாய்மார்கள் போன்றவர்களுக்கு நோன்பை பிறிதொரு நாளில் நோற்பதற்கு சலுகையுண்டு. ஆனால் தொழுகையை விடுவதற்கு புத்தியுள்ள வயது வந்த எந்த முஸ்லிமுக்யகும் எப்படிபட்ட நேரத்திலும் அனுமதியில்லை. ஒருவருக்கு நின்று தொழ முடியாவிட்டால் இருந்தும் தொழ முடியாவிட்டால் சாய்ந்தும், தண்ணீர் கிடைக்காவிட்டால் அல்லது தண்ணீர் கிடைத்தும் அதைக்கொண்டு வுழூச் செய்ய முடியாவிட்டால் தயம்மும் செய்தும் தொழ வேண்டும். இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக எதிரிகளோடு யுத்தம் செய்யும் நேரத்தில் கூட தொழுகையை விடுவதற்கு அனுமதியில்லை.

யார் தொழுகையை வேண்டுமென்று விட்டுவிடுகின்றாரோ அவர் இஸ்லாத்தை விட்டே வெளியேறிவிடுவார். மறுமையில் நரகம் செல்வதற்கு முதல் காரணமே தொழுகையை விடுவதுதான். அல்லாஹ் எம் அனைவரையும் நரக வேதனை யிலிருந்து பாதுகாப்பானாக!

தொழுகை எவ்வளவு முக்கியமான வணக்கம் என்பதைத் தெரிந்து கொண்டோம். இனிமேல் நமது வாழ்வில் மரணம் வரை ஐங்காலத் தொழுகைகளையும் பேணுதலாக அதன் விதிமுறைகளை அனுசரித்து அடக்கமாக உள்ளச்சத்துடன் தொழுது பயன் பெறுவோமாக!

**பயிற்சிகள்**

**01. மஸ்ஜித்களில் ஜமாஅத்துடன் தொழுவதால் ஏற்படும் பயன்கள் யாவையெனக் கலந்துரையாடி பட்டியல் படுத்துங்கள்.**

**02. தொழாதவர்களைத் தொழுகையில் ஈடுபடுத்துவதற்காக எவ்வாறான விதிமுறைகளை கையாலலாம் என எடுத்துக்காட்டுங்கள்.**

செயற்பாடு

**தொழுகையை நடாத்தும் முறைமைபற்றிய பயிற்சியொன்றை மாணவர்களைக் கொண்டு செய்து காட்டுங்கள்.**

## 2.2 ஸகாத் கொடுப்போம்

- **ஸகாத் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்று.**
- **தொழுகை பற்றிக் கூறும் அல்குர்ஆன் வசனங்கள் ஸகாத்தையும் இணைத்தே கூறியுள்ளன.**
- **ஸகாத்தைக் கொடுக்கும் ஒருவன் தன்னையும் தன் பொருட்களையும் தூய்மைப் படுத்திக்கொள்கிறான்.**
- **ஸகாத் விதியாகும் பொருட்கள், அளவு, பெறத் தகுதியுடையோர் பற்றியெல்லாம் இஸ்லாம் விபரித்துள்ளது.**
- **ஸகாத் உரிய முறையில் சேமிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டாலேயே அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கம் நிறைவேறும்.**

### ஸகாத்தின் முக்கியத்துவம்

ஸகாத் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும் அது குறிப்பிட்ட நபர்கள் குறிப்பிட்ட கூட்டத்தினருக்கு, குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட அளவில், குறித்த பொருட்களில் இருந்து, நிறைவேற்றப்பட வேண்டிய செல்வத்தின் மீதான கடமையாகும்.

அல்லாஹ் அல்குர்ஆனில் அநேகமான இடங்களில் தொழுகையுடன் இணைத்து ஜகாத்தையும் குறிப்பிட்டுள்ளான். இது ஸகாத்துக்குக் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. தொழுகையின் முக்கியத்துவத்தை எந்தவொரு முஸ்லிமும் மறுக்க முடியாதது போல ஸகாத்தின் முக்கியத்துவத்தையும் ஏற்க வேண்டுமென்பதை தொழுகையுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளமை எடுத்துக்காட்டுகின்றது.

ஸகாத் கட்டாயக் கடமையென்பதை முஸ்லிம்கள் ஒருமித்த கருத்தில் ஏற்றுக்கொண்டு அது கட்டாயக் கடமை அல்ல என மறுப்பவர் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு வெளியேறியவராகக் கொள்ளப்படுவார்.

எவர் அது பற்றி அதை நிறைவேற்றும் விடயத்தில் கருமித்தனம் செய்கின்றாரோ, அல்லது அதிலிருந்து எதையாவது குறைத்துக் கொண்டாரோ, அவர் தண்டனைக்கு உள்ளாவார் என்று அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்:

"தொழுகையை நிறைவேற்றுங்கள், ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள் (02:110)

"அல்லாஹ்வுக்கு வணக்கத்தைத் தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும். மேலும் தொழுகையை அவர்கள் நிலைநாட்ட வேண்டும். ஸகாத்தை அவர்கள் கொடுக்க வேண்டும் என்பதைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இது தான் நேரான மார்க்கமாகும். (98:05)

இஸ்லாம் ஐந்து அடிப்படைகள் மீது அமைக்கப்பட்டுள்ளது என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய போது, ஸகாத் கொடுப்பதையும் இணைத்துக் கூறியுள்ளார்கள்.

மேலும் ஸகாத்தை நிறைவேற்றுவதை விட்டவர், அதனை மறுப்பவர் (கு.்ப்ரில்) நிராகரிப்பில் உள்ளார். என்று அல்லாஹ் கூறுகின்றான்.

ஆகவே அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து விலகிப் பச்சாதாபப்பட்டு, தொழுகையையும் நிறைவேற்றி, ஸகாத்தையும் கொடுத்து வந்தால் (அவர்கள்) உங்கள் சன்மார்க்கத்தின் சகோதரர்கள் ஆவார். (9.11)

தொழுகையை நிறைவேற்றாதும், ஸகாத்தை கொடுக்காதும் இருப்பவர் இஸ்லாமிய சகோதரர் என்ற நெருக்கத்தைப் பெறார். அதன் காரணமாகவே, அபூபக்ர் ஸித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்தவர்களோடு போர் தொடுத்தார்கள். அவ்வேளை அவர்களோடு போர் தொடுக்க வேண்டுமென அபூபக்ர் ஸித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எடுத்த முடிவுக்கு நபித்தோழர்கள் உடன்பட்டார்கள். ஆகவே அது நபித்தோழர்களின் ஒருமித்த கருத்தான இஜ்மாஉ என்ற அந்தஸ்த்தைப் பெற்றுவிட்டது.

## ஸகாத்தின் பயன்கள்

- ஸகாத் அதனைக் கொடுக்கும் பழக்கமுள்ளவர்களைக் கஞ்சத்தனத் திலிருந்து தூரமாக்குவதுடன் அவர்களது சொத்துக்களையும் தூய்மைப் படுத்துகிறது.
- முஸ்லிமுக்கு தர்மம் செய்யும் மனப்பாங்கை ஏற்படுத்துகிறது.
- செல்வந்தனுக்கும் ஏழைக்குமிடையே அன்பையும் பரிவையும் ஏற்படுத்துகிறது.
- ஏழைகளின் தேவை நிறைவு செய்யப்படுவதால் ; திருட்டு, யாசகம் போன்ற இழி செயற்பாடுகள் குறைவடைகின்றன.
- மனிதனைப் பாவங்களை விட்டும் தூய்மைப்படுத்துவதற்கும், பாவங்களை அழித்து,பதவிகளை உயர்த்துவதற்கும் காரணமாக அமைகிறது.
- அல்லாஹ்வால் வழங்கபட்ட நி∴மத்துக்கள் பகிர்ந்தளிக்க படுகின்றது.

அல்லாஹ் இவ்விதமாகப் பணக்காரர்களின் செல்வத்தில் ஒரு சிறிய பங்கு ஏழைகளுக்குரியது எனத் தீர்மானித்து இருக்கின்றான். இதற்கு மேலதிக மாக ஏதேனும் வழங்கினால் அது ஸதகாவாகும்.

## ஸகாத் விதியாகும் பொருட்கள்

- தங்கம், வெள்ளி, பணம்
- வியாபாரப் பொருட்கள்,
- கால்நடைகள் (ஆடு, மாடு, ஒட்டகம்)
- தானியம் (நெல், கோதுமை போன்றன)
- பழங்கள் ( பேரீத்தம்பழம், திராட்சைப்பழம்)

### தங்கம், வெள்ளி

நிஸாப் எனும் உச்ச அளவை அடைந்த நிலையில் தங்கம், வெள்ளி போன்றன யாரிடம் உள்ளனவோ அவர் மீது ஸகாத் கடமையாகும். **தங்கத்தில் நிஸாப் 20மிஸ்கால் அதாவது 85 கிராமுக்குச் சமனாகும்.** வெள்ளியின் நிஸாப் 200 திர்ஹம் அதாவது 672 கிராமுக்குச் சமனாகும்.

## வியாபாரப் பொருட்கள் :

வியாபாரத்தில் ஈடுபடக் கூடிய முஸலிம்கள் மீனன் ஒரு முறை ஸகாத் கொடுப்பது இஸ்லாத்தில் கடமையாக்கப்பட்டுள்ளது.

இலாபத்தை நோக்கமாகக் கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்யக் கூடிய அனைத்துப் பொருட்களிலும் ஸகாத் கடமையாகும். இவற்றின் பெறுமதி ஸகாத் வழங்குவதற்குரிய நிஸாப் எனும் உச்ச அளவை எட்டி இருக்க வேண்டும். அவற்றை வெள்ளி, தங்கம் ஆகிய இரண்டில் ஒன்றின் கிரயத்திற்கு ஈடாக மதிப்பிட வேண்டும். அவற்றை வெள்ளியின் பெறுமானத்தை வைத்து வழங்குவதே ஏற்றமானதாகும். என பல அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். வியாபாரிகள் ஒன்வொரு வருடமும் தங்களது வியாபாரப் பொருட்களை (கணக்கிருப்பு)ப் பார்பது கடைமையாகும்.

## விவசாயப் பொருட்கள்

- பேரீத்தம் பழம், திராட்சை.
- கோதுமை, அரிசி போன்றவை.

விளைபொருட்கள் நிஸாப் எனும் உச்ச அளவை அடைந்து விட்டால் ஸகாத் கடமையாகும். தானியங்களின் ஆரம்ப நிஸாப் அளவு 698.5 கிலோ கிராமுக்குச் சமனாகும். அது ஓராண்டு பூர்த்தியானதாக இருக்க வேண்டும் என்றது நிபந்தனையில்லை. அறுவடை செய்தவுடன் அவற்றுக்கு ஸகாத் விதியாகி விடும்.

இவை மழை நீர், ஆற்று நீர் போன்ற வற்றால் செலவின்றி நீர்ப்பாய்ச்சப்பட்டு விளைந்திருக்குமாயின் பத்து வீதம் ஸகாத் விதியாகும். தண்ணீருக்காகச் செலவு செய்யப்பட்டிருக்குமானால் ஐந்து வீதம் ஸகாத் கடமையாகும்.

## கால்நடைகள்

### ஒட்டகம் மாடு ஆடு

இவற்றில் ஸகாத் வழங்குவதற்கும் நிஸாப் எனும் உச்சவரம்பை எட்ட வேண்டும். ஒட்டகத்தின் நிஸாப் ஐந்து, மாட்டின் நிஸாப் முப்பது, செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு என்பவற்றின் நிஸாப் நாற்பது. அதற்கு குறைவானால் ஸகாத் கிடையாது.

இவை உரிமையாளரின் கைக்குக் கிடைத்து ஓராண்டு பூர்த்தியாகி இருக்க வேண்டும்.

கீழ்க்காணும் அட்டவணை மாட்டுக் குரிய ஸகாத்தைத் சுட்டிக்காட்டுகின்றது

| எண்ணிக்கை | ஸகாத்தாக கொடுக்க வேண்டியது |
|---|---|
| 30 முதல் 39 வரை | ஒரு வயது பூர்த்தியான ஒரு பசு. |
| 40 முதல் 59 வரை | இரண்டு வயது பூர்த்தியான ஒரு பசு. |
| 60 முதல் 69 வரை | ஒரு வயது பூர்த்தியான இரு காளை. |
| 70 முதல் 79 வரை | இரண்டு வயது பூர்த்தியான பசு ஒன்றும்,ஒரு வயது பூர்த்தியான காளை ஒன்றும். |

கீழ்க்காணும் அட்டவணை ஆட்டுக்குரிய ஸகாத்தை சுட்டிக்காட்டுகின்றது

| எண்ணிக்கை | ஸகாத்தாக கொடுக்க வேண்டியது |
|---|---|
| 40 முதல் 120 வரை | ஒரு ஆடு |
| 121 முதல் 200 வரை | இரு ஆடுகள் |
| 201 முதல் 300 வரை | மூன்று ஆடுகள் |

- இதற்கு மேல் அதிகமாக இருக்குமாயின் ஒவ்வொரு நூறு ஆடுகளுக்கும் ஓர் ஆடு வீதம் கொடுக்க வேண்டும்.

## ஸகாத் பெறத் தகுதியானவர்கள்

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்:

(ஸகாத் என்னும்) தானதர்மங்கள் எல்லாம் ஏழைகளுக்கும், வறியவர்களுக்கும், இந்த தானதர்மங்களை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாதின் பால் அவர்களது உள்ளம் ஈர்க்கப்பட்டவரக்ளுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடன்பட்டவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்),வழிப்போக்கர்களுக்கும் உரியனவாகும். (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும். அல்லாஹ் (யாவும்)அறிபவன். மிக்க ஞானமுடையவன். (09:60)

மேற்படி எட்டுப் பிரிவினரையும் சுருக்கமாக நோக்குவோம்

### 1) ஃபகீர் (ஏழை)

தனது நாளாந்த அத்தியாவசியத் தேவைகளைக்கூட நிறைவேற்றிக் கொள்ளக் கஷ்டப்படும் பரம ஏழைகள்.

### 2) மிஸ்கீன் (வறியோர்)

தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலையிலுள்ள, சொற்ப வருமானத்தையுடையவர்கள்.

### 3) ஆமில் (ஸகாத் வசூலிப்பவர்கள்)

ஸகாத் பணியில் ஈடுபட்டிருப்போரை இது குறிக்கும், ஸகாத் திரட்டுதல், பாதுகாத்தல், பதிவுசெய்தல், கணக்குப் பார்த்தல், விநியோகம் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவோர்.

### 4) முஅல்லபதுல் குலூப் (உள்ளம் ஈர்க்கப்பட்டவர்கள்)

புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோரையும், இஸ்லாம் பற்றி நல்லெண்ணம் கொண்டுள்ள; அதன்பால் இணக்கமாக உள்ளோரையும் இது குறிக்கும்.

### 5) அர்-ரிகாப் (அடிமை மீட்பு மற்றும் சிறையிலிருந்து விடுதலை செய்வதற்கு)

அடிமைகளை உரிமை விடுவதற்காகவும்,எதிரிகளால் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காகவும் ஸகாத் கொடுக்க முடியும்.

### 6) காரிமூன் (கடன்பட்டவர்கள்)

இவர்களுடைய கடனைத் தீர்ப்பதற்காக ஸகாத் நிதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டும். அதனைப் பெறுபவர் முஸ்லிமகளாயிருப்பதும், கடனைத் தீர்ப்பதற்கு வசதியில்லாமலிருப்பதும், அக்கடன், பாவத்தில் ஈடுபடுவதற்குறியதாக இல்லாமல் இருப்பதும், கடனுக்கான தவணையை அடைந்திருப்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

### 7) பீஸபீலில்லாஹ் (அல்லாஹ்வின் பாதையில் ஈடுபடுவோர்)

அல்லாஹ்வின் திருப்தியை நாடி, அவனுடைய மார்க்கத்தை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை இதுகுறிக்கும்.

### 8) இப்னுஸபீல் (வழிப்போக்கர்)

ஊருக்குச் செல்ல முடியாமல் வழியிலே சிக்குண்ட ஒரு பயணி. அவனது ஊரில் அவன் செல்வந்தனாக இருந்தாலும் அவன் ஊர் போய்ச் சேருமளவிற்கு ஸகாத் நிதியிலிருந்து கொடுக்க வேண்டும்.

❖ **குறிப்பு: கடல் பொருட்களிலிருந்து ஸகாத்**

**முத்து, பவளம், மீன் இவை போன்ற கடலிலிருந்து பெறப்படுபனவற்றில் வியாபாரத்திற்கென ஒதுக்கப்பட்டவற்றைத் தவிர ஏனையவற்றில் ஸகாத் கடமையாவதில்லை**

### பயிற்சிகள்

1. ஸகாத்தின் முக்கியத்துவத்தைக் கூறுக
2. ஸகாத்தின் பயன்களைப் பட்டியற்படுத்துக.
3. ஸகாத் விதியாகும் பொருட்கள் எவை?
4. ஆட்டுக்குரிய ஸகாத்தை அட்டவணைப்படுத்துக?
5. ஸகாத் பெறத் தகுதியானவர்கள் யாவர்?

# 2.3 ஹஜ்ஜை நிறைவேற்றுவோம்

இஸ்லாத்தின் அடிப்படை வணக்க வழிபாடுகளுள் ஹஜ் ஐந்தாவது கடமையாகும். ஹஜ் எனும் அறபுப் பதம் ஓரிடத்தை நாடிச் செல்லல் என்ற மொழிக்கருத்தைத் தருகின்றது. ஷரீஆ வரையறுத்துள்ள சில நிபந்தனைகளுக்குட்பட்ட முஸ்லிம்கள், தமது வாழ்வில் ஒரு முறையேனும் புனித மக்கா சென்று துல்ஹஜ் பிறை 08 முதல் 13 வரையுள்ள காலப் பகுதியில் நிறைவேற்றுகின்ற சில கிரியைகளே ஹஜ் என அழைக்கப்படுகிறது. இது உடலாலும் உள்ளத்தாலும் பொருளாலும் நிறைவேற்றப்படுகின்ற ஒரு கடமையாகும்.

ஹஜ்ஜின் முக்கியத்துவம் பற்றி அல்குர்ஆன் பல இடங்களில் விளக்கியுள்ளது. ஸூறா ஆல இம்றானில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். ‘‘(இவ்வுலகில் இறைவனை வணங்குவதற்கென) மனிதர்களுக்காக அமைக்கப்பெற்ற ஆலயங்களில் முதன்மையானது நிச்சயமாக பக்காவில் இருப்பதுதான். (அது ஆசீர்வதிக்கப்பட்டதாகவும்) மிக்க பாக்கியமுள்ளதாகவும் அகிலத்தாருக்கு நேரான வழி (காட்டி) யாகவும் இருக்கின்றது. அதில் தெளிவான அத்தாட்சிகளும் இருக்கின்றன. இப்றாஹீம் (தொழுகைக்காக) நின்ற இடமும் இருக்கின்றது. எவர் அதில் நுழைகின்றாரோ அவர் (அபயம் பெற்று) அச்சமற்றவராகி விடுகின்றார். (ஆகவே), எவர்கள் அங்கு யாத்திரை செல்லச் சக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ, அத்தகைய மனிதர்கள் மீது, அல்லாஹ்விற்காக (அங்கு சென்று) அவ்வாலயத்தை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் படைப்புக்களில் எந்தத் தேவையும் அற்றவனாக இருக்கின்றான்.

(3:96 - 97)

**இங்கு பக்கா என்பது புனித மக்காவையே குறிக்கும். இருதிப் பகுதி ஹஜ்ஜின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது. இவற்றை விளக்கும் வகையில் நபி மொழிகள் அமைந்துள்ளன.**

✸ ‘‘அல்லாஹ்வின் புனித இல்லம் செல்வதற்கான வசதி மற்றும் போக்குவரத்து சாதனம் **என்பவற்றை** பெற்றிருந்தும் **ஒருவர்** ‘ஹஜ் செய்யவில்லையாயின் அவர் யஹூதியாகவோ நஸாராவாகவோ மரணிக்கட்டும். ஏனெனில் அங்கு செல்வதற்கு சக்தி பெற்ற மனிதன் மீது கஃபதுல்லாஹ்வை ஹஜ் செய்வது கடமையாகும்’’ (திர்மிதி)

✸ நபி (ஸல்) அவர்களிடம் ‘அமல்களில் சிறந்தது எது?’ எனக் கேட்கப்பட்ட போது ‘அல்லாஹ்வையும் ரஸூலையும் நம்புவதாகும்’ எனப் பதிலளித்தார்கள். அடுத்ததாக எது எனக் கேட்கப்பட்ட போது ‘‘அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்தல்’’ எனப் பதிலளித்தார்கள். அடுத்து எது என வினவப்பட்ட போது ஒப்புக் கொள்ளப்பட்ட ஹஜ் என்று பதிலளித்தார்கள். (புகாரி)

* ‘‘வயோதிபர், பலவீனமானோர், பெண்கள் நிறைவேற்றுகின்ற ஜிஹாத் ஹஜ் ஆகும்’’ (நஸாஈ)

* ‘‘ஹஜ் செய்ய விரும்புபவர் அவசரமாக அதனை நிறைவேற்றட்டும். ஏனெனில் அவர் ஹஜ் செய்ய முடியாத வகையில் நோய்வாய்ப்படலாம். அவரது வாகனம் தொலைந்துவிடலாம். அல்லது அவருக்கு வேறு தேவைகள் ஏற்பட்டு விடலாம்.’’ (அஹ்மத்)

* ‘‘ஹஜ் உம்ரா கடமையை நிறைவேற்றுவோர் அல்லாஹ்வின் விருந்தினராவார். அவர்கள் அல்லாஹ்வைப் பிரார்த்தித்தால் அல்லாஹ் பதிலளிப்பான். அவர்கள் அல்லாஹ்விடம் கேட்டால் அவன் கொடுப்பான்.’’ (பஸ்ஸார்)

* ‘‘ஹஜ், கடமையை நிறைவேற்ற செலவிடும் தொகையானது இறைபாதையில் 700 மடங்கு செலவிடுவதற்கு சமனானது’’ (அஹ்மத்)

* ‘‘ஒரு ஹாஜி தனது குடும்பத்தவருள் 400 பேருக்கு மறுமையில் பரிந்து பேசுபவராக இருப்பார்.’’ (பஸ்ஸார்)

* “நீங்கள் ஹஜ், உம்ரா கடமையை நிறைவேற்றுங்கள். உலை இரும்பு, வெள்ளி,தங்கம் என்பவற்றினை அசுத்தத்தை அகற்றி விடுவது போல ஹஜ்ஜும் உம்ராவும் வறுமையையும், பாவங்களையும் அகற்றிவிடுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவனத்தைத் தவிர வேறு கூலியில்லை” (திர்மிதி)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நபி மொழிகள் யாவும் ஹஜ்ஜின் சிறப்பையும் அதன் பயனையும் உணர்த்துகின்றன.

ஹஜ்ஜின் செயன்முறைகள் அதனுடன் தொடர்புடைய நிபந்தனைகள் போன்றவற்றை முன்னைய வகுப்புகளில் கற்றுள்ளீர்கள். இப்போது அவற்றின் சிறப்பையும் பயனையும் அறிந்து கொண்டீர்கள். இது தொடர்பாக இன்னும் கற்க வேண்டிய அம்சங்களை உயர் வகுப்புகளில் கற்பீர்கள்.

## செயற்பாடு

அண்மையில் ஹஜ் கடமையை நிறைவேற்றிய ஒருவரை நேரில்கண்டு அவர் அதனை நிறைவேற்றிய முறை பற்றியும் அவரது அனுபவங்கள் பற்றியும் அறிந்து கட்டுரையொன்று எழுதுங்கள்.